# கல்விப் பொதுத் தராதரப்பத்திர உயர்தரம்
## தரம் 12, 13

# இஸ்லாம்

## பாடத்திட்டம்

**(2009 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படும்)**

சமயக் கல்வித்துறை
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம

# 1.0 அறிமுகம்

மனிதனை சமூகமயமாக்கும் சாதனங்களுள் கல்வி பிரதான இடத்தை வகிக்கின்றது. சமூகமயமாக்கல் பணியில் சமயத்துக்கு முக்கிய இடம் உண்டு. எனவேதான் கல்வியும், சமயமும் இணைபிரியாமல் செயல்படுகின்றன.

இஸ்லாம் ஒரு வாழ்க்கை முறை என்ற வகையில் முஸ்லிம்களின் வாழ்வை உருவாக்குவதிலும் செயற்படுத்துவதிலும் ஒழுங்கமைப்பதிலும் முழுமையான செல்வாக்கைச் செலுத்திவருகின்றது. அது ஒரு பாடமாகக் கொள்ளப்பட்டாலும் வாழ்க்கைக்கான வழிகாட்டலாகவே கற்பிக்கப்பட வேண்டும். பொதுவாக மனித சமுதாயமும், குறிப்பாக இளைஞர் பரம்பரையும் சமயத்தைப் புறக்கணித்துவரும் இக்காலகட்டத்தில், சமயத்தின் தேவையும் முக்கியத்துவமும் மாணவரது உள்ளத்தில் வேரூன்றப்பட வேண்டியது இன்றியமையாததாகும். அதற்காக வகுக்கப்பட்டுள்ள இந்தப் பாடத்திட்டத்தைக் கையாளுவதில் ஆசிரியர்களின் பங்களிப்பு வினைத்திறன் மிக்கதாக அமைதல் வேண்டும். இது, கோட்பாட்டு ரீதியாக மட்டுமன்றி அணுகுமுறை, முன்மாதிரி போன்ற வழிமுறைகளுக்கூடாகவும் முன்வைக்கப்படுதல் வேண்டும்.

பல்லின சமூகத்துக்கு மத்தியில் சிறுபான்மைச் சமூகமாக வாழுகின்ற எங்களுக்கு இஸ்லாம் பாடபோதனை, இஸ்லாத்தின் தனித்துவத்தை காப்பதாகவும் அதே நேரத்தில் ஏனைய இனங்களோடு பரஸ்பரம் புரிந்துணர்வோடு நடந்துகொள்ள வேண்டியதாகவும் அமைகின்றது. எனவேதான் பல்லின சமூகங்கள் பற்றி அறிந்துகொள்வதற்கான வாய்ப்பு இப்பாடத்திட்டத்தில் வழங்கப்பட்டுள்ளது.

சமய பாடம் கலைத்துறைக்கான ஒரு பாடமாகக் கொள்ளப்பட்டாலும் வாழ்க்கையில் நேரடியாகப் பங்குகொள்ளும் விடயங்களே அதில் பொதிந்துள்ளதால், எல்லாத்துறை மாணவர்களும் சமய பாடத்தில் - குறிப்பாக இஸ்லாம் பாடத்தில் பங்கேற்க வேண்டிய தேவையுண்டு. இவ்வவாறான பங்கேற்றலை ஏற்படுத்துவதில் இஸ்லாம் கற்பிக்கும் ஆசிரியரின் அர்ப்பண சிந்தையும் முயற்சிகளும் தேவைப்படுகின்றன. இந்த வகையில் இப்பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் ஆசிரியர்களின் முழுமையான ஒத்துழைப்பும் பங்களிப்பும் விசேடமாக எதிர்பார்க்கப்படுகின்றன.

இப்பாடத்திட்டத்தை கற்பிப்பதில் ஆசிரியர்கள் விரிவான அடிப்படையில் தேடுதல் மேற்கொள்வதோடு மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு, செயன்முறை போன்றவற்றில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தும் வழிவகைகளையும் மேற்கொள்ளுதல் வேண்டும். இதற்கூடாக இஸ்லாமிய அறிவும் பக்குவமும் பயிற்சியுமுடைய ஒரு மாணவப் பரம்பரையைத் தோற்றுவிக்க முடிவதோடு நாட்டுக்கு நல்ல குடிமக்களாக அவர்களை உருவாக்கவும் முடியும் என நம்புகிறோம்.

## 2.0 பாடத்தின் நோக்கம்

- இஸ்லாம் என்றால் என்ன என்பதை விளங்கிக் கொள்ளல்.
- இஸ்லாத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் அறிந்து நயத்தல்.
- இஸ்லாத்தின் நம்பிக்கைக் கோட்பாடுகளை விளங்கி ஏற்றுக்கொள்ளல்.
- இஸ்லாத்தின் உலக நோக்கு பற்றிய தெளிவைப் பெற்று விளக்குதல்.
- இஸ்லாத்தின் மூலாதாரங்களை விளங்கி அதன் வழி, வாழ்வை அமைத்துக் கொள்ளல்.
- தனிமனித, குடும்ப வாழ்வில் இஸ்லாத்தின் போதனைகளை பின்பற்றல்.
- இஸ்லாத்தின் ஆன்மீக, லௌகீக ஒழுங்குகளை விளங்கி நடைமுறைப்படுத்தல்.
- இபாதத்துகளைக் கடைப்பிடித்து இறைதிருப்தியைப் பெற முயற்சித்தல்.
- சமூக வாழ்வு தொடர்பாக இஸ்லாத்தின் போதனைகளை அறிந்து பங்களிப்புச் செய்தல்.
- இஸ்லாத்தின் பொருளியல் கோட்பாட்டை விளங்கி அதன்படி வாழ்வை அமைத்துக்கொள்ளல்.
- இலங்கைக்கு இஸ்லாம் அறிமுகமான முறையினையும் இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்புகளையும் இனங்கண்டு நயத்தல்.
- தவறாகப் புரியப்பட்டுள்ள இஸ்லாத்தின் ஒழுங்குகளை சரியாக விளங்கி எடுத்துக்காட்டல்.
- பிற சமய சமூக கலாசார நடைமுறைகளை விளங்கி அனைவருடனும் புரிந்துணர்வோடும் நல்லிணக்கத்தோடும் வாழல்.

# பாடசாலை தவணைக்கேற்ப பாடத்திட்டத்தை வகுத்தக் கொள்வதற்கான உத்தேச திட்டம்

| தரம் | தவணை | தேர்ச்சி மட்டங்கள் | பாடவேளைகள் |
|---|---|---|---|
| தரம் 12 | I | 1.1, 1.2, 1.3, 1.4, 1.5, 1.6, 1.7 | 100 |
| | II | 2.1, 2.2, 3.1, 3.2, 3.3 | 100 |
| | III | 4.1, 4.2, 5.1, 5.2, 6.1, 6.2 | 100 |
| தரம் 13 | I | 7.1, 7.2, 7.3, 8.1 | 100 |
| | II | 8.2, 9.1, 9.2 | 100 |
| | III | 9.3, 10.1, 10.2 | 100 |

# 3.0 பாடத்திட்டம்
## 3.1 தரம் 12

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **1.0 இஸ்லாத்தையும் அதன் நம்பிக்கைக் கோட்பாடுகளையும் விளங்கி, அவற்றின் படி ஒழுகிவருவார்.** | 1.1 இஸ்லாத்தையும் அதன் சிறப்பம்சங்களையும் விளங்கி கூறுவார். | • இஸ்லாம் என்பதன் விளக்கமும் அதன் சிறப்பம்சங்களும் | 10 |
| | 1.2 இறைவன் இருக்கிறான் என்பதையும், அவன் ஒருவன் என்பதையும் விளங்கி செயற்படுவார். | • தவ்ஹீத் கோட்பாடு<br>• இலாஹ், றப்பு<br>• அஸ்மா, ஸிபாத் பற்றிய விளக்கம் | 15 |
| | 1.3 ஈமானைப் பாதிக்கும் அம்சங்களை அறிந்து நாளாந்த வாழ்வில் அவற்றிலிருந்து தவிர்ந்து நடப்பார். | • ஷிர்க் - அதன் வகைகள்<br>• இல்ஹாத், குப்ர், ரித்தத், நிபாக் | 15 |
| | 1.4 ரிஸாலத், நுபுவ்வத் கோட்பாடுகளை விளங்கி வாழ்வில் கடைப்பிடிப்பார். | • ரிஸாலத், நுபுவ்வத், வஹி - அதன் முக்கியத்துவம்<br>• இறுதி நபித்துவம்<br>• மஹப்பதுர் ரஸூல் (ஸல்) | 15 |
| | 1.5 மறுமை வாழ்வு பற்றிய நம்பிக்கையை மேம்படுத்துவதற்கூடாக உலக வாழ்வை சீர்படுத்திக் கொள்வார். | • மறுமை வாழ்வு பற்றிய இஸ்லாமிய நோக்கும் அது உண்டு என்பதற்கான ஆதாரங்களும்<br>• உலக முடிவுக்கான அடையாளங்களும் மறுமை நிகழ்வுகளும்<br>• மறுமை நம்பிக்கை மனித வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கம் | 15 |
| | 1.6 அனைத்தும் அல்லாஹ்வின் நாட்டப்படியும் திட்டப்படியுமே நடைபெறுகின்றன என்பதை ஏற்றுச் செயற்படுவார். | • அல்கழாஉ வல் கத்ர் பற்றிய நம்பிக்கையும் அது மனித வாழ்வில் ஏற்படுத்தும் தாக்கமும் | 10 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 1.7 அகீதாவில் தோன்றிய பிரிவுகளை விளங்கி தூய அகீதாவை பின்பற்றி ஒழுகுவார். | • அகீதா பற்றிய நோக்குகளும் பிரிவுகளும்<br>• அவை தோன்றுவதற்கான காரணங்களும் விளைவுகளும்<br>• அஹ்லுஸ்ஸுன்னா வல் ஜமாஆவின் அகீதா | 20 |
| **2.0 உலக நோக்கு பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டத்தை விளங்கி ஒழுகுவார்.** | 2.1 பிரபஞ்சம், மனிதன் பற்றிய இஸ்லாமிய கண்ணோட்டத்திற்கு அமைய தனது வாழ்வை சீரமைத்துக் கொள்வார். | • பிரபஞ்சம் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டம்<br>• மனிதவாழ்வு பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டம் | 15 |
| | 2.2 அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற வகையில் மனிதன் தனது பொறுப்புக்களை அறிந்து வாழ்வில் நடைமுறைப்படுத்துவார். | • இபாதத்<br>• இமாரத்<br>• கிலாபத் | 10 |
| **3.0 வஹியின் அடிப்படையில் அமைந்த மூலாதாரங்களை விளங்கிச் செயற்படுவார்.** | 3.1 அல்குர்ஆனின் உள்ளடக்கம், முக்கியத்துவம், அது வாழ்க்கையில் ஏற்படுத்தும் தாக்கம் என்பவற்றைக் கிரகித்து தனது மொழிநடையில் விபரிப்பார். | • அல்குர்ஆன் இஸ்லாத்தின் அடிப்படை மூலாதாரம் என்பதும் அதன் முக்கியத்துவமும்<br>• அல்குர்ஆன் அருளப்படலும் தொகுக்கப்படலும்<br>• அல்குர்ஆனின் அமைப்பும் உள்ளடக்கமும்<br>• அல்குர்ஆன் ஓர் அற்புதம் | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 3.2 அல்குர்ஆனுடன் உணர்வுபூர்வமான தொடர்பை ஏற்படுத்தி அதனை தனது வாழ்வின் வழிகாட்டியாக ஏற்று நடப்பார். | • அல்குர்ஆனின் மீது எமக்குள்ள கடமைகள்<br>• தப்ஸீரின் முக்கியத்துவம் | 15 |
| | 3.3 ஸுன்னாவின் முக்கியத்துவத்தையும் அது சேகரிக்கப்பட்ட வரலாற்றை யும் விளங்கி தனது வாழ்க்கையின் ஓர் அம்சமாக அதை ஏற்றுக் கொள்வார். | • ஹதீஸ், ஸுன்னா பதவிளக்கமும் அதன் முக்கியத்துவமும்<br>• ஹதீஸ் தொகுக்கப்பட்ட வரலாறு<br>• மௌழூஆத்துக்களின் தோற்றமும் அது ஏற்படுத்திய தாக்கமும்<br>• ஸுன்னாவின் தூய்மையைப் பாதுகாக்க மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளும் பிரதான ஹதீஸ் தொகுப்பு நூல்களும் | 30 |
| **4.0 இஜ்திஹாதின் மூலம் பெறப்படுகின்ற துணை மூலாதாரங் களை இனங்கண்டு நடைமுறைப்படுத்து வார்.** | 4.1 இஜ்திஹாதின் முக்கியத்துவத்தை அறிந்து அதன்வழி செயற்படுவார். | • இஜ்திஹாத் - கருத்தும் முக்கியத்துவமும்<br>• இஜ்திஹாதும் தக்லீதும்<br>• சட்டத்துறை வளர்ச்சியில் இஜ்திஹாதின் பங்கு | 20 |
| | 4.2 துணை மூலாதாரங்களை விளங்கி அவற்றைப் பின்பற்றுவார். | • இஜ்மாவும் கியாஸும்<br>• ஏனைய துணை மூலாதாரங்கள் | 20 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **5.0 இஸ்லாத்தின் ஆன்மீக, தார்மீக ஒழுங்குகளை விளங்கி தனது வாழ்வில் கடைப் பிடிப்பார்.** | 5.1 ஆன்மீக மேம்பாட்டுக்கான வழி களை பிரயோகித்து தமது வாழ்க்கையைச் செம்மைப்படுத்திக் கொள்வார். | • இஸ்லாத்தில் ஆன்மீகம் வகிக்கும் இடம் (தஸ்கியத்துந் நப்ஸ்)<br>• ஆன்மீக மேம்பாட்டின் விளைவும் அதன் விருத்திக்கு தஸவ்வுப் துறையின் பங்களிப்பும் | 15 |
| | 5.2 ஆன்மீக மேம்பாட்டுக்கு தடையாக உள்ளவற்றைத் தவிர்ந்து நடப்பார் | • ஆன்மீக மேம்பாட்டுக்கு தடையாக உள்ள அம்சங்கள்<br>• ஆன்மீக வாழ்வை பாதிக்கும் பாவங்கள் | 15 |
| **6.0 வணக்க வழிபாடு களின் ஆன்மீக லௌகீக பயன் களை அறிந்து அன்றாட வாழ்வில் முனைப்புடன் நிறைவேற்றுவார்.** | 6.1 இபாதத்துகளின் ஆன்மீக லௌகீக அம்சங்களைக் கிரகித்து தமது மொழிநடையில் விபரிப்பார். | • இபாதத் பற்றிய விளக்கமும் பிரதான இபாதத்துக்களும்<br>  • தொழுகை<br>  • ஸகாத்<br>  • நோன்பு<br>  • ஹஜ் | 15 |
| | 6.2 பிரதான இபாதத்துகளை வாழ்வில் செம்மையாகக் கடைப்பிடித்து ஒழுகுவார் | • பிரதான இபாதாக்களின் செயல்முறை<br>  • தொழுகை<br>  • ஸகாத்<br>  • நோன்பு<br>  • ஹஜ் | 15 |

## 3.2 தரம் 13

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| **7.0 இஸ்லாத்தின் தோற்றம், வளர்ச்சி பற்றியும் இலங்கையில் இஸ்லாம் அறிமுகமானமை பற்றியும் விளங்கி எடுத்துக் கூறுவார்.** | 7.1 இஸ்லாத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் விளங்கி அதன் முன்மாதிரிகளை எடுத்துக்கூறுவார். | • நபியவர்கள் காலத்தில் இஸ்லாத்தின் தோற்றம்<br>• இஸ்லாத்தின் வளர்ச்சி<br>  • அரசியல் வளர்ச்சி<br>  • சமய, சமூக இயல் வளர்ச்சி | 25 |
| | 7.2 இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாகிய வரலாற்றுப் பின்னணியை கிரகித்து விமர்சன ரீதியாக எழுதிக் காட்டுவார். | • இலங்கையில் இஸ்லாம் அறிமுகமாதல்<br>• இலங்கையில் இஸ்லாத்தின் வளர்ச்சி | 20 |
| | 7.3 இலங்கையர் என்ற அடிப்படையில் முஸ்லிம்கள் தேசத்துக்கு ஆற்றிய பங்களிப்புக்களை விளங்கி நாட்டுக்குப் பணியாற்றுவார். | • இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்புகள்<br>• இலங்கை முஸ்லிம்களின் கலாசார பங்களிப்புகள் | 25 |
| **8.0 தனிமனித, குடும்ப வாழ்வுடன் தொடர்பான இஸ்லாமிய சட்டதிட்டங்களையும் போதனைகளையும் கற்று தனது வாழ்வை நெறிப் படுத்திக்கொள்வார்.** | 8.1 தனிமனித, குடும்ப வாழ்விற்கான இஸ்லாமிய அணுகு முறையை பிரயோகித்து குடும்ப வாழ்வை சிறப்பாக அமைத்துக்கொள்வார். | • தனிமனிதனும் குடும்பமும்<br>• குடும்ப வாழ்வின் முக்கியத்துவம்<br>• விவாகம்<br>• விவாக விலக்கு<br>• இத்தா<br>• கணவன் மனைவிக்கும், மனைவி கணவனுக்கும் செய்ய வேண்டிய கடமைகளும் உரிமைகளும்<br>• பெற்றோர் பிள்ளைகளுக்கும் பிள்ளைகள் பெற்றோர்களுக்கும் செய்ய வேண்டிய கடமைகளும் உரிமைகளும்<br>• உறவினரும் அயலாரும் | 30 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 8.2 மனிதவாழ்வின் அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, வீடு தொடர்பான இஸ்லாமிய நெறி முறைகளையும் விதிமுறைகளை யும் பின்பற்றி ஒழுகுவார். | • ஹலால் - ஹராம் முக்கியத்துவமும் வரையறைகளும் விதிமுறைகளும்<br>• உணவு தொடர்பான இஸ்லாமிய விதிமுறைகள்<br>• வீட்டுவாழ்க்கை தொடர்பான ஒழுக்கங்கள் | 30 |
| **9.0 சமூக வாழ்வுடன் தொடர்பான இஸ்லாமிய சட்ட திட்டங்களையும் போதனைகளையும் அறிந்து அதற்கேற்ப தமது வாழ்வை வடிவமைத்துக் கொள்வார்.** | 9.1 இஸ்லாத்தில் சமூக வாழ்வின் முக்கியத்துவத்தைப் புரிந்து, சமூகக் கடமைகளை நிறைவேற்றுவார். | • சமூக வாழ்வின் முக்கியத்துவம்<br>• இஸ்லாமிய சமூக அமைப்பின் சிறப்பியல்புகள்<br>  • சகோதரத்துவம்<br>  • சமத்துவம்<br>  • சமூக நீதி<br>  • கூட்டுப் பொறுப்பு<br>  • தலைமைத்துவம்<br>• சமூகத்தை வழிநடாத்தும் நிறுவனம் என்ற வகையில் மஸ்ஜித்<br>• பிற சமூகத்தவருடனான உறவு<br>• உயிர்களிடத்தில் அன்பு<br>• மனித உரிமை | 30 |
| | 9.2 தொழில்சார் நடவடிக்கைகளில் இஸ்லாமிய விதிமுறைகளைப் பின்பற்றுவார். | • இஸ்லாத்தில் பொருளீட்டல்<br>• இஸ்லாத்தில் தொழில்சார் ஒழுங்குகள்<br>• இஸ்லாம் தடுக்கும் பொருளாதார நடவடிக்கைகள்<br>• இஸ்லாமிய வாரிசுரிமைச் சட்டம் | 40 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | பாட உள்ளடக்கம் | பாடவேளை |
|---|---|---|---|
| | 9.3 தவறாகப் புரியப்பட்ட எண்ணக் கருக்களை சரியாக விளங்கி மற்றவர்களுக்கு தெளிவுபடுத்துவார். | • பலதார மணம்<br>• பெண்கள் நிலை<br>• குற்றமும் தண்டனையும்<br>• ஜிஹாத் | 40 |
| **10.0 ஒழுக்கம் பற்றிய இஸ்லாமியக் கண் ணோட்டத்தை விளங்கி அதன் முக்கியத்துவத்தையும் அதனை வளர்க்கும் முறைகளையும் அறிந்து ஒழுகுவார்.** | 10.1 ஒழுக்கம் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டத்தை கிரகித்து நடை முறைப்படுத்துவார். | • ஒழுக்கம் பற்றிய இஸ்லாத்தின் கண்ணோட்டம்<br>• வாழ்வில் ஒழுக்கத்தின் முக்கியத்துவம்<br>• ஆன்மீக மேம்பாடும் ஒழுக்கமும் | 30 |
| | 10.2 இஸ்லாம் கூறும் ஒழுக்க போதனை களையும் வழிமுறைகளையும் பிரயோகித்து இஸ்லாமிய ஒழுக்கத் தைக் கடைப்பிடிப்பார். | • ஒழுக்கத்தை விருத்திசெய்வதற்கான போதனை களும் நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறை களும்<br>• முஸ்லிம்களிடம் காணப்பட வேண்டிய தனிமனித, குடும்ப, சமூக வாழ்வோடு தொடர்புடைய ஒழுக்கப் பண்புகள் | 30 |

# 4.0 கற்றல் கற்பித்தல் முறை

மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்குகளுக்கூடாக நடத்தையில் ஏற்படுகின்ற தெளிவானதும், நிலையானதுமான மாற்றத்தை இலக்காகக் கொண்டு தேர்ச்சிகள் வகுக்கப்பட்டுள்ளமையால், சமய பாடத்தை வெறும் அறிவு விருத்திக்கான நிலையில் மட்டுமன்றி மனப்பாங்கு விருத்தி, நடத்தை மாற்றம் என்பவற்றையும் ஏற்படுத்துகின்ற வழியில் நடத்துவதற்கு, தேர்ச்சிமைய கற்றல் கற்பித்தல் முறை சிறப்பாக அமையும். தேர்ச்சி மைய கல்வியில் ஆசிரியரின் வகிபாகம் மாற்றமடைவதாலும் மாணவரின் ஈடுபாடு அதிகமாக அமைவதாலும் உயர்வகுப்பில் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தலாம். ஆதலால் மாணவரின் திறமைகளை இனங்கண்டு கற்றலுக்குத் தேவையான துணைகளுக்கூடாக மாணவர்களின் அடைவுமட்டத்தை எய்துவதற்கு ஆசிரியர்கள் வழிகாட்டுதல் வேண்டும்.

மாணவரைக் கவர்வது, ஆர்வத்தோடு எதிர்பார்ப்பது போன்ற தன்மைகளை உருவாக்குவதற்கு பொருத்தமான உத்திகளைக் கையாள்வது ஆசிரியரின் பணியாகும். விருத்தி செய்துகொள்ள வேண்டிய அடிப்படைத் தேர்ச்சிகளுடன் தொடர்புடைய முன்னறிவு நினைவுகூரப்பட வேண்டும்.

கற்றல் கற்பித்தல் செயற்பாட்டினை விரிவாக்கும் போது அவை பின்வரும் வகைகளில் அமைய முடியும்.

- வினா - விடைப் புத்தகம்
- குழுக்கலந்துரையாடல்
- விவாதம்
- கருத்தரங்கு
- களவேலைப் புத்தகம்
- தினக்குறிப்பு
- கருத்துக்களை/ விமர்சனங்களை முன்வைத்தல்.

# 5.0 பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும்

எமது நாட்டுக் கலைத்திட்டம் பரீட்சையை இலக்காகக் கொண்ட ஏட்டுக் கல்விக்கு முதலிடம் வழங்கி நடைமுறைப்படுத்தப்படுகின்றமையால் திறன்களும், மனப்பாங்குகளும், நற்பழக்கங்களும் அரிதாகவே உருவாகும் நிலை காணப்படுகின்றது. இந்நிலையை நிவர்த்தி செய்வதற்குப் பொருத்தமான பின்னணி பாடசாலைகளில் உருவாகத்தக்க வகையில் பாடசாலைத் தொகுதியும் பாடசாலைக் கொள்கையும் இசைவுபடுத்தப்படல் வேண்டும்.

இஸ்லாம் பாடத்திட்டத்தினூடாக மாணவரின் திறன்களையும், மனப்பாங்குகளையும் நற்பழக்கங்களையும் விருத்தி செய்துகொள்வதற்கு உதவுவதற்காக பாடசாலை மட்டத்தில் ஒழுங்கு செய்யப்படும் பல்வேறு பாடசாலைச் செயற்பாடுகளைத் துணையாகக் கொள்ளல் சிறந்ததாகும். இப்புதிய கலைத்திட்டத்தைப் பாடசாலையில் அமுல்படுத்துவதற்காக பின்வரும் வழிவகைகளை மேற்கொள்ளலாம்.

1. சமய, கலாசார விழுமியங்களை மேம்படுத்த விரும்பும் அமைப்புக்களை பாடசாலையில் நடாத்தச் செய்தல்.
2. மத்ரஸாக்கள், ஜாமிஆக்கள், பயிற்சி முகாம்கள் போன்றவற்றைப் பார்வையிடுவதற்காக கல்விச் சுற்றுலாக்களை ஒழுங்குபடுத்தி மாணவரைப் பங்குபற்றச் செய்தல்.
3. பாடசாலைக்குத் தேவையான இஸ்லாமிய நடைமுறைகளை மாணவர் தாமாக திட்டமிட்டு அமைப்பதற்கான வேலைத்திட்டமொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்தல்.
4. புத்தாக்கச் செயற்றிட்டங்களை உள்ளடக்கிய போட்டிகள், நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றவற்றை நடாத்தல்.
5. இனங்காணப்பட்ட புத்தாக்கம் படைத்த மாணவர்களையும் அவர்களுக்கு வளப்பங்களிப்புச் செய்தோரையும் அழைத்து செயலமர்வுகளை ஒழுங்கு செய்தலும், அவர்களின் சேவைகளைப் பாடசாலைக்குப் பெற்றுக் கொள்ளலும்.

மேற்படி பணிகளை வெற்றிகரமானவையாக்கிக் கொள்வதற்காக அதிபர் உட்பட ஆசிரியர் குழாத்தினதும் மாணவ மாணவியரதும் ஆர்வமிக்க பங்களிப்பு இன்றியமையாததாகும். இப்பாடத்தைப் பாடசாலையில் நடைமுறைப்படுத்துவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் ஆசிரியர்களுக்குத் தேவையான வசதிகளையும் ஒத்துழைப்பையும் வழங்க அதிபர் தயங்கலாகாது. மேற்படி செயற்பாடுகளை ஒழுங்கு செய்வதற்காக மரபுரீதியான பாடசாலைக் கொள்கையிலிருந்து சற்று விலகி பாடசாலைக்கெனச் சிறப்பான ஒரு கொள்கைக் கோவையை வகுத்துக் கொள்ளல் வேண்டும். அவ்வாறான ஒரு கொள்கைக் கோவையை வெற்றிகரமானதாக்கிக் கொள்வதற்காக, பாடசாலையுடன் தொடர்புடைய சமுதாயத்தினரின் ஈடுபாட்டையும் வளவாளர்கள் மற்றும் நிறுவனங்களின் அறிவையும் ஆலோசனைகளையும் பெற்றுப் பயனடையலாம்.

# 6.0 கணிப்பீடும் மதிப்பீடும்

பாடசாலை மட்டக் கணிப்பீட்டு நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு தவணைக்குமென நிர்ணயிக்கப்பட்ட தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்கள் என்பன உள்ளடங்கும் வகையில் கணிப்பீட்டுக்கருவிகளைத் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பாடத்திட்டமானது தரம் 13 இன் இறுதியில் இடம்பெறுகின்ற தேசிய மட்டக் கணிப்பீடான கா.பொ.த. உயர்தர பரீட்சைக்குரியதாகவே தயாரிக்கப்பட்டுள்ளது.

இதனை அடிப்படையாகக் கொண்டு, இலங்கைப் பரீட்சைத்திணைக்களத்தின் மூலம் தேசிய மட்டத்தில் முதலாவது பரீட்சை 2011 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்குரிய வினாப்பத்திரத்தின் அமைப்பு, மாதிரி பற்றிய தெளிவான விபரங்கள் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் மூலம் வழங்கப்படும்.